பக்கங்கள் : 12
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 264 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 24 வெள்ளிக்கிழமை (09.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


சந்நிதியானுக்கு இன்று தேர்

### வியாழேந்திரன், பிள்ளையான் உள்ளிட்ட
## 37 இராஜாங்க அமைச்சர்கள் பதவியேற்பு
### அனைத்தும் பழைய முகங்களே



11

## சீமெந்து, கம்பிக்கு நிர்ணய விலை

(கொழும்பு)
கட்டுமானத் தொழில் துறையில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலை உயர்வுகளை அடுத்து, சீமெந்து மற்றும் கம்பி போன்ற முக்கிய 11



### பிரித்தானிய
## மகாராணி காலமானார்

(கொழும்பு)
பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத் தனது 96ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.
இச் செய்தியை உறுதிப் 11

### வரி அதிகரிப்பால் மாத்திரம்
# நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது

### பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா



*(கொழும்பு)*
வரி அதிகரிப்பினால் மாத்திரம் பொருளாதார நெருக்கடிக்கும் தற்போதைய சமூக பிரச்சினைகளுக்கும் ஒரு போதும் தீர்வு காண முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். *(12ஆம் பக்கம் பார்க்க)*

## சமூக பாதுகாப்பு வரி சட்டமூலம்
### மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)
சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு பாராளுமன்றில் நேற்று மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.
சமூக பாதுகாப்புபங்களிப்பு 11

### ரணில் அரசுக்கு எதிராக
## பிக்கு மாணவர் ஒன்றியம் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)
ரணில் அரசுக்கு எதிராக் பௌத்த பிக்குகள் ஒன்று திரண்டு மாபெரும் போராட்டம் ஒன்றை கொழும்பில் நேற்று முன்னெடுத்தனர்.
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வசந்த முதலிகே, சிறிதர்ம தேரர் மற்றும் பலர் கைது செய்யப்பட்டதற்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
ஆர்ப்பாட்டத்தின் போது, நாட்டில் அத்தி 11




## நிச்சயமற்ற நிலை மீண்டும் ஏற்படலாம்
### எரிசக்தி அமைச்சர் காஞ்சன

(கொழும்பு)
நாட்டில் மீண்டும் நிச்சயமற்ற நிலை ஏற்படலாம் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.
தற்போதைய டெண்டர் நடைமுறைக்கு அமைவாக நிலக்கரியை இறக்குமதி செய்ய முடியாத பட்சத்தில் நாட்டில் மீண்டும் நிச்சயமற்ற நிலை ஏற்படலாம் என மின்சாரம் மற் 11

## மரத்தால் விழுந்த குடும்பஸ்தர் பலி
### மாதகலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
மரத்தால் தவறிவிழுந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதான வீதி, மாதகல் பகுதியில் நேற்று மாலை 5 11

## அரச வன்முறைக்கு எதிராக மக்களுடன் இணைந்து போராடுவேன்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)
அரச மிலேச்சத்தனம் மற்றும் அரச வன்முறைகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி மக்களுடன் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக போராடும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.
இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக எண்ணிக்கையிலான இராஜாங்க அமைச்சர்கள் நியமனத்துக்கு எதிராக எதிர்க்கட்சி தீர்மானம்

(கொழும்பு)

அதிக எண்ணிக்கையிலான இராஜாங்க அமைச்சரவையை ஜனாதிபதி நியமித்தமைக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பிரிவு நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"நாடு மிகவும் பாரதூரமான முறையில் வங்குரோத்தடைந்துள்ள நேரத்தில், வாழ்க்கைச் செலவு அதிகரித்துப்போன நேரத்தில், அரசால் தன்னிச்சையாகவும், நெறிமுறையற்றதுமாக இராஜாங்க அமைச்சர்கள் 37 பேரளவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பெரும் எண்ணிக்கையிலான இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பது இத்தருணத்தில் நாட்டுக்கு ஏற்றுக்கொள்ள முடியாது என்பதோடு, அது மேலும் இந்த நாட்டை அதலபாதாளத்துக்குத் தள்ளும் என்று ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாக நம்புகிறது.

இந்த வீணான நிலைமைக்கு எதிரான மக்களின் எதிர்ப்புப் போலவே குடிமக்கள் போராட்டத்தின் நோக்கங்களை மீறி இந்த மிகப் பெரிய இராஜாங்க அமைச்சரவையை நியமித்ததன் மூலம் அரசு பழைய வழமையான பாதையில் பயணிக்கின்றது என்பதையே மறைமுகமாக உணர்த்துகின்றது.

இதன் பிரகாரம், இந்தப் பாரிய இராஜாங்க அமைச்சரவையை ஜனாதிபதி நியமித்தமைக்கு எதிராக நேற்று கூடிய ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)


## யாழ்.மக்களுக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியிலான ரஷ்ய புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்
1ஆம் குறுக்குத்தெருவில் அமைந்த
சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை
மாவட்ட அலுவலக மண்டபத்தில்

செப்டெம்பர் 10 - 11

50% மேல் விசேட கழிவுகள் வழங்கப்படும்

கணிதம், விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், அரச அறிவியல், சிறுவர்களுக்கான புத்தகங்கள் உட்பட மார்க்சிஸ - லெனின் நூல்கள் விற்பனைக்கு



ஏற்பாடு (12718)
முற்போக்கு பிரசுர நிலையம்


# வடக்கு மக்களுக்கு இராணுவம் அவசியமாம்

## சபையில் உளறினார் அமைச்சர் சரத் வீரசேகர



(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் இருந்து இராணுவத்தினரை அகற்ற வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் மாத்திரமே குறிப்பிட்டுக்கொள்கின்றனர். ஆனால் மாகாண மக்கள் இராணுவத்தினர் அவசியம் என எண்ணுகிறார்கள் என முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சமூக பாதுகாப்பு உதவுத்தொகை அறவிட்டு வரி சட்டமூலம் தொடர்பான விவாதத்தின் போது வடக்கில் இராணுவத்தினர் பொது மக்களின் காணிகளை தொடர்ந்தும் கையகப்படுத்தி வைத்திருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறிய நிலையில், அதற்கு பதிலளிக்கையிலேயே சரத் வீரசேகர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சரத் வீரசேகர மேலும் குறிப்பிட்டதாவது,

யுத்தக் காலத்தில் இராணுவத்தினர் பாதுகாப்பு காரணங்களுக்காக கைப்பற்றப்பட்ட காணிகளில் 90 வீதமானவை வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன. மிகுதி காணிகளே பாதுகாப்பு தரப்பினரிடம் உள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இராணுவம் இருப்பது யாழ்ப்பாண மக்களுக்கு அவசியமாகும். ஆனால் தமிழ்க் கூட்டமைப்பு மாத்திரமே இராணுவத்தினரை அங்கிருந்து அகற்ற வேண்டும் என குறிப்பிடுகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பாதுகாப்பு காரணிகளின் நிமித்தமே இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இராணுவம் தொடர்பில் அரசியல் தரப்பினரே தவறான கருத்துக்களை குறிப்பிட்டுக்கொள்கிறார்கள் என்றார். (ம)


## முதலாம் ஆண்டு சிரார்த்த தின அழைப்பிதழ்

அன்புடையீர்!

ஆழ்கடலில் தோன்றிய முத்தே எம்மை ஆறாத துயரத்தில் 2021.08.21 விட்டுச் சென்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர்



## அமரர் கந்தன் இரத்தினம்

அவர்களின் முதலாம் ஆண்டு சிரார்த்த தின நினைவுநாள் எதிர்வரும் 09.09.2022 வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி

(C-4885)

அண்ணாசிலையடி,
கரணவாய் தெற்கு.

இங்ஙனம்
குடும்பத்தினர்


# பதவியேற்ற இராஜாங்க அமைச்சர்களுடன் நாமல் அவசர சந்திப்பு

(கொழும்பு)

புதிதாக நேற்று பதவிப்பிரமாணம் செய்து கொண்ட இராஜாங்க அமைச்சர்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச அவசர கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டார்.

இந்த சந்திப்பு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

அரசாங்கத்தின் 37 புதிய இராஜாங்க அமைச்சர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இதனை தொடர்ந்து பதவியேற்ற இராஜாங்க அமைச்சர்களுக்கும் நாமலுக்கும் இடையில் அவசர சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. (ம)


## வல்லிபுரம் ஆழ்வார் சுவாமி கோவில்
### துன்னாலை வடக்கு, புலோலி

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 24.09.2022 சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அக்கால கட்டத்தில் கோவிலில் தற்காலிக கடை போடும் அனைத்து வியாபாரிகளும் 13.09.2022 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் ஆலயத்திற்கு வந்து உங்கள் கடைக்குரிய இடங்களையும் தெரிவு செய்து கூறு விலை கோரலிலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்கின்றேன்.

செயலாளர்
ச.கேசவானந்தன்

(C-4884)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பணியாற்ற திட்டம்

## வடக்கு ஆளுநர்

(அராலி)

சிங்கப்பூரில் அமைந்துள்ள ஆசியாவின் முன்னணி தகவல் தொழில்நுட்ப பல்கலைக் கழகங்களில் ஒன்றாக விளங்கும் நன்யாங் பல்கலைக் கழகத்துடன் வடக்கு மாணவர்களுக்கு உயர்கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கு இணைந்து பணியாற்ற வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா திட்டமிட்டுள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற மாநாடு ஒன்றுக்காக கலந்து கொள்ளச் சென்ற வடக்கு ஆளுநர் அங்கு பல்வேறு சந்திப்புக்களில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில் சுமார் 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் சிங்கப்பூரின் பிரபல்யம் வாய்ந்த ஆசியாவின் முன்னணி தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களில் ஒன்றாக விளங்கும் நன்யாங் பல்கலைக்கழகத்திற்கு நேற்று முன்தினம் புதன்கிழமை ஆளுநர் விஜயம் செய்தார்.

குறித்த பல்கலைக்கழகத்தில் வடக்கில் தகவல் தொழில்நுட்பத் துறையில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு உயர் கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கும் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப உதவியை வடக்குக்கு பெற்றுக் கொள்வதற்கும் ஆளுநர் திட்டமிட்டுள்ளதாக ஆளுநர் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (4-104)



நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி காஞ்சன விமலவீர தலைமையில் நெல்லியடி வர்த்தக சங்கத்தின் அனுசரணையுடன் உலர் உணவுப்பொதிகள்,பால்மா வகைகள் என்பன தினக்கூலி வேலை செய்யும் பொது மக்களுக்கு நேற்று வழங்கப்பட்டன. (படம்-மகாலிங்கம்)

# பாணை அதிக விலைக்கு விற்குமாறு தொடர் அழுத்தம்

## யாழ்.மாவட்ட வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பாணை அதிக விலைக்கு விற்குமாறு சிலர் அச்சுறுத்தல் விடுத்து அழுத்தங்களை பிரயோகிப்பதாக யாழ்.மாவட்ட வெதுப்பக உரிமையாளர்கள் சங்க தலைவர் க. குணரத்தினம் தெரிவித்துள்ளார்.

அது குறித்து மேலும் தெரிவிக்கையில், கோதுமை மாவிற்கான தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் பாணின் விலையை அதிகரிக்க வேண்டும் என சில வெதுப்பக உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தற்போதைய நிலையில் 200 ரூபாய்க்கு பாண் விற்பனை செய்வதனால் வெதுப்பக உரிமையாளர்களுக்கு எந்த பாதிப்போ நட்டமோ ஏற்பட்ட மாட்டாது.

சிறிய அளவிலான வெதுப்பக உற்பத்திகளை மேற்கொள்வோரே 200 ரூபாய்க்கு பாணை விற்பனை செய்ய இணக்கம் தெரிவித்து, விற்பனை செய்கின்றனர்.

ஆனால், சில பெரிய வெதுப்பக உரிமையாளர்கள் தமக்கு நட்டம் எனவும் பாணின் விலையை அதிகரியுங்கள் என தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு அழுத்தங்களை தருகின்றனர். அதிலும் ஒரு சிலர் அச்சுறுத்தும் முகமாகவும் கதைக்கின்றார்கள் என தெரிவித்தார். (4-104)

# கலந்துரையாடல்

(குப்பிழான்)

இடைக்கால வரவு செலவுத் திட்டமும் இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலமும் எனும் தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இல- 62, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொருளியல் துறையின் தலைவர் பேராசிரியர் செ. சந்திரசேகரம் விசேட உரை ஆற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து சபையோர் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடலும் இடம்பெறும். (4-18)

# வல்லிபுர ஆழ்வார் மஹோற்சவம் 24 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ். வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்தும் 17 தினங்கள் இவ்வாலய மஹோற்சவப் பெருந் திருவிழா சிறப்பாக இடம்பெறவுள்ளது.

இவ்வாலய மஹோற்சவப் பெருந் திருவிழாவில் அடுத்த மாதம் 1 ஆம் திகதி சனிக் கிழமை குருக்கட்டு விநாயகர் தரிசனமும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வெண்ணைத் திருவிழாவும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை துகில் திருவிழாவும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாம்புத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

5 ஆம் திகதி புதன் கிழமை கம்சன் போர்த் திருவிழாவும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத்திருவிழாவும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சப்பரத் திருவிழாவும் 8 ஆம் திகதி சனிக் கிழமை காலை தேர்த்திருவிழாவும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை கேணித் தீர்த்தத் திருவிழாவும்- அன்றைய தினம் மாலை கொடியிறக்க உற்சவமும் நடைபெறும். (4-18)


# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய டிப்பரை மடக்கிப் பிடித்த பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

உரிய அனுமதிகள் இன்றி மணல் ஏற்றி வந்த டிப்பர் சாரதியை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்ததுடன் டிப்பர் வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

பளை பகுதியில் இருந்து உரிய அனுமதிகள் இன்றி, சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றியவாறு டிப்பர் வாகனம் ஒன்று வருவதாக நேற்று முன்தினம் புதன் கிழமை அச்சுவேலி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் வீதி சோதனை நடவடிக்கைகளில் அச்சுவேலி பொலிஸார் ஈடுபட்டிருந்த வேளை அனுமதியின்றி மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனத்தினை வழிமறித்து சாரதியை கைது செய்ததுடன், மணலுடன் வாகனத்தை கைப்பற்றி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சாரதி புத்தூர் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (4-33)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற யாழ்.தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தீர்த்தோற்சவம் நேற்று வியாழக் கிழமை காலை ஆலயத் துர்க்கா புஷ்கரணி தீர்த்தக் கேணியில் வெகுசிறப்பாக இடம்பெற்றது. (படங்கள்:- ரவிசாந்)


# கண்ணீர் அஞ்சலி

அமரர். கபிரியேல்பிள்ளை அருளானந்தம்

காரைநகர் பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு.அருளானந்தம் யூட்ததேயுஸ் அவர்களின் அன்புத் தந்தை அமரர்.கபிரியேல்பிள்ளை அருளானந்தம் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை வேண்டுகிறோம்



(12717)

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம்.


## உ/த விஞ்ஞான பிரிவைச் சேர்ந்த

# வெளிமாவட்ட மாணவர்களுக்கு யாழ்.இந்து விசேட சலுகை

(யாழ்ப்பாணம்)

உயர்தர விஞ்ஞான பிரி வில் கற்கும் வெளி மாவட்டங்களைச்சேர்ந்த பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்களுக்கு இலவச விடுதி வசதிகளுடன், மேலதிக வகுப்புக்களை நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது.

குறித்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வன்னி பிரதேசம், கிழக்கு மாகாணம் மற்றும் மலையக பகுதிகளைச் சேர்ந்த பொருளாதார ரீதியில் பின்தங்கிய உயர்தர விஞ்ஞான பிரிவில் கல்வி கற்க ஆர்வமுள்ள மாணவர்கள் எமது பாடசாலையில் இணைந்து கல்வி கற்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தினை யாழ். இந்துக் கல்லூரி ஏற்படுத்தி தருகின்றது.

அவர்களுக்கான விடுதி வசதியினை இலவசமாக வழங்குவதுடன் பாடசாலை நேரத்திற்கு மேலதிகமான கற்பித்தல் நடவடிக்கையினையும் மேற்கொள்வதற்கு எமது ஆசிரியர்கள்தயாராகவுள்ளனர்.

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு உயர்தர பிரிவிற்கு 30 மாணவர்களுக்கான அனுமதியினை வழங்கவுள்ளோம். எனவே ஆர்வமுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கவும் என பாடசாலை நிர்வாகம்கோரியுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. (4-33)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆசியக் கிண்ணம்
# ஆப்கானை வீழ்த்தி இறுதிக்குள் பாகிஸ்தான்



ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் சுப்பர் 4 சுற்றின் நான்காவது போட்டியில், பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட்டால் திரில் வெற்றியை பதிவு செய்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி, ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

சார்ஜாவில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், பாகிஸ்தான் அணியும் ஆப்கானிஸ்தான் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 129 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, இப்ராஹிம் சத்ரான் 35 ஓட்டங்களையும் ஹஸ்ரதுல்லா ஸசாய் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில், ஹரிஸ் ரவூப் 2 விக்கெட்டுகளையும் நஷிம் ஷா, மொஹமட் ஹஸ்னெய்ன், நவாஸ் மற்றும் சதாப்கான் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 130 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 19.2 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட்டால் திரில் வெற்றியை பதிவு செய்தது. இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சதாப் கான் 36 ஓட்டங்களையும் இப்தீகார் அஹமட் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சில், பாரூக்கீ மற்றும் அஹமட் மாலிக் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் ரஷித்கான் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 36 ஓட்டங்களையும் 1 விக்கெட்டினையும் வீழ்த்திய சதாப் கான் தெரிவுசெய்யப்பட்டார். (4)

## பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி
# கிளிநொச்சி ம.வி சாதனை



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 18 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்தது கிளிநொச்சி மகா வித்தியாலய அணி.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டம் நேற்று வியாழக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

18 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி மோதியது.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

வடக்கு கிழக்கு மாகாணம் பிரிந்த பின்னர் சம்பியன் கிண்ணம் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கே உரித்தானதொன்றாகியது.

இதனை இவ்வாண்டு நடைபெற்ற போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்தது. (4-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2695

### யஷ்வந்

பிரச்சினை என்பது தொலைநோக்கி
போலவே நீ பார்க்கும் பார்வையில்
தான் எல்லாம் அடங்கி இருக்கிறது.
அதை பெரிதாக நினைத்தால்
தெரிதாகத்தான் தோன்றும்
சிறியதாக நினைத்தால்
பிரச்சினை உனக்கு ஒரு
பொருட்டாகவே தெரியாது.

### சுஹ்றித்




வெற்றி உன்னிடம்

கஷ்டம் வரும்போது
கண்ணை மூடாதே
அது உன்னை
கொன்றுவிடும்.
கண்ணை திறந்து பார்,
நீ அதை
வென்று விடலாம்...
-அப்துல் கலாம்.

### தினுஷா

பிரியாணியும் வாழ்க்கை மாதிரி தாங்க...



பீஸ் புல்லா இருந்தா தான் நல்ல இருக்கும்.

### சிவஜித்




### ஹாரிகா

இந்த ஊர்ல சாப்பாடு எங்க விக்கும்?



இந்த ஊர்ல மட்டும் இல்ல, எந்த
ஊர்ல சாப்பிட்டாலும், தொண்டைல தான் விக்கும்.

### அஷினா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப்பட்டியல் பதவியை தம்மிக்கவுக்கு விற்ற பசில்

## மேர்வின் சில்வா பரபரப்புத் தகவல்



(கொழும்பு)
பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தம்மிக்க பெரேராவுக்கு வழங்குவதற்காக பசில் ராஜபக்ஷ ஒரு பில்லியன் ரூபாவை வாங்கியதாக மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பணத்திற்கு விற்றதாக கூறும் மேர்வின் சில்வா, இது தொடர்பான ஒப்பந்தத்தை தொடர்பு கொண்டவர் பசில் ராஜபக்ஷ என்றும் குறிப்பிடுகிறார்.

இணைய ஊடக கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி)

## அமரர்.திருமதி.டெய்சி மனோகரன் அவர்களின் 1 ஆம் ஆண்டு நினைவாக...

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்பது பொய்யா மொழி"

### அமரர்.திருமதி. டெய்சி மனோகரன்



ஈழத் திருநாட்டின் சிரசென விளங்கும் யாழ். மண்ணில் ஏழைகளின் ஒளியேற்றும் ஏழாலை எனும் கிராமத்தில் 09.08.1951 வந்துதித்த வரலாற்று பொக்கிஷம் அமரர்.திருமதி. **டெய்சி மனோகரனின்** முதலாம் ஆண்டு நினைவு தினம் (09.09.2022) இன்றாகும்.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல் இன்னறுங் கனிச்சோலைகள் செய்தல், இனிய தீர்த்தன சனைகள் இயற்றல், பின்னருள்ள தர்மங்கள் யாவும் பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல், அன்ன யாயினும் புண்ணியம் கோடி ஆங்கேள் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்ற எழுத்தறிவிப்பதன் மகத்துவத்தின் இயம்பி நிற்கிறான் பாரதி. அவ்வகையில் காலம் காலமாக ஆயிரம் ஆயிரம் சிறார்களுக்கு கல்விக் கண் திறக்கும் அரிய பணியினை ஆற்றியவர் ஆவார்.

இளமைக்காலத்தில் இளமைத் துடுப்பும் கல்வி அறிவும் மிக்கவராக திகழ்ந்தவர். அதன் பயனாய் யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர் பின்னர் கொழும்பு பல்கலைக்கழக வர்த்தகத் துறை பட்டதாரியானார். பின் கல்வி டிப்ளோமா பட்டப் படிப்பினையும் பூர்த்தி செய்து கொண்டார். பிரபல்ய பாடசாலை கொழும்பு வெஸ்லிக் கல்லூரியின் க.பொ.த (சாதாரண தரம்), க.பொ.த(உயர்தரம் வர்த்தகத்துறை) ஆசிரியராக 25 வருட நீண்ட கால ஆசிரியை சேவையை பூர்த்தி செய்தார்.அத்துடன் சமூக சேவைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்த இவர் தந்தை செல்வா நற்பணி மன்றம் மற்றும் யாழ். தந்தை செல்வா அபிவிருத்தி மன்றம் அத்துடன் யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்ற அங்கத்தவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல் , மூன்று சில்லு நாற்காலி , ஊன்று கோல் , படுக்கை விரிப்புக்கள், துவாய்கள் மற்றும் சிறு குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் ஆகியன வருடா வருடம் கணவருடன் சேர்ந்து வழங்கினார்.

அத்துடன் ஏழாலை வடக்கு அருள்மேரி அபிவிருத்தி சங்கத்தில் பல வருடங்களாக அங்கத்தவராக இருந்து மக்களுக்கு சேவையாற்றினார்.இவரின் சேவையைப் பாராட்டி அகில இலங்கை சமாதான நீதிவான் அரசாங்கத்தால் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (12561)

**தலைவர், சபை உறுப்பினர்கள்.**
**யாழ்.ஏழாலை வடக்கு அருள்மேரி சமூக அபிவிருத்தி சங்கம்.**
**தந்தை செல்வா சமூக அபிவிருத்தி மன்றம்.**

## 16ம் ஆண்டு 2ம் ஆண்டு நினைவுகள்



தோற்றம் 09 - 03 - 1939
மறைவு 16 - 12 - 2006

அமரர்
**வல்லிபுரம் முருகுப்பிள்ளை**

தோற்றம் 19 - 09 - 1947
மறைவு 31 - 08 - 2020

அமரர்
**முருகுப்பிள்ளை நாகம்மா**

காலங்கள் பல கடந்தாலும் சில நினைவுகள்
ஞாலத்தில் அழிந்து போவது இல்லை
காலத்தின் கணக்கு முடியும் வரை - காத்திருப்போம் நாம்
ஞாலத்தில் வாழ மீண்டும் வருவீர்களென்று
நீங்கள் எங்களுக்கு முன்மாதிரியாக
கௌரவத்துடன் வாழ்ந்து காட்டினீர்கள்
நீங்கள் காட்டிய பாதையில் நாம் செல்கின்றோம்
உங்களது கௌரவத்தையும் நேர்மையையும் எம்மால்
எப்போதுமே அணுகிப் பார்க்கவே முடியாது..
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(12685)

**மூத்த மகனும் திரு.திருமதி**
**லங்கநாதன் நளாயினி**
**குடும்பத்தினர்.**

## இராசிபலன்

09.09.2022
ஆவணி 24, வெள்ளிக்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 6.19 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 12.18 மணிவரை
சுப நேரம் -6.04-7.34 மணிவரை
இராகு காலம் -10.34-12.04 மணிவரை
நடேசர் அபிஷேகம்
சந்திராஷ்டமம்-புநர் பூசம், பூசம்.

**வளவன்**




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.




நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.




கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள், வளர்ச்சி கூடும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.




அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.




கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.




குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.




இறை வழிபாட்டால் இன்பங்கள் கூடும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.




தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.




உறவினர்களின் ஒத்துழைப்பால் முன்னேற்றம் காணும் நாள், நேற்றைய பிரச்சினை ஒன்று இன்று முடிவுக்கு வரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், ஆனந்த வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.


அழகை ரசிக்க கண்கள் ஆசைப்படுவது இயற்கையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## துள்ளின மாடு!

வெற்றியூரில் கோவிந்தய்யா என்ற பண்டிதர் இருந்தார். அவருக்குத் தன்னை விட யாரும் அறிவாளி இல்லை என்ற மண்டைக் கர்வம் இருந்தது. அவர் பழைய நூல்களை புரட்டிப் பார்த்து அவற்றிலுள்ள குற்றங் குறைகளை மட்டும் எடுத்துக் கொண்டு அவற்றை விவரிப்பதையே வேலையாகக் கொண்டிருந்தார்.

அவரைக் கண்டு பண்டிதர்கள் நடுங்கினார்கள். அவர் பல ஊர்களுக்கும் போய் வாதம் புரிந்து அங்குள்ள பண்டிதர்களை பிரமிக்க வைத்தவாறே ஏலகிரி நாட்டை அடைந்தார்.

அங்கு தலைநகரில் மன்னன் ஏகாம்பரநாதனைக் கண்டு தான் அந் நாட்டுப் பண்டிதர்களை வாதம் புரிந்து தோற்கடிக்க வந்திருப்பதாகக் கூறவே மன்னனும் பண்டிதர்களின் சபையைக் கூட்டினான்.

கோவிந்தய்யா எந்த விடயத்திலும் தாம் புரிந்து கொண்ட பொருளல்லாது வேறு பொருள் கூறவே பண்டிதர்கள் வியப்பும் அடைந்து மறுபேச்சுப் பேச முடியாது நின்றார்கள்.

கோவிந்தய்யாவோ கர்வத்தோடு சுற்றிலும் ஒருமுறை பார்த்து சிரித்தார். மன்னனோ அவரை வெல்ல ஒரு பண்டிதர் தன் நாட்டில் இல்லையே என்று எண்ணி அவமானத்தால் தலை குனிந்து கொண்டான். அப்போது அரசாங்க விதூஷகன் விநோத சந்திரன் கோவிந்தய்யாவை மட்டம் தட்ட யோசிக்கலானான்.

கோவிந்தய்யா தம் புலமையை மேலும் வெளிப்படுத்துவது போல் "நீங்களெல்லாம் "சர்வே ஜனா சுகினோ பவந்து" என்று பல அறிஞர்களும் பண் டிதர்களும் சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். அவர்கள் அதைத் தவறாகச்சொல்கிறார்கள். அதைச் சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் "சர்வே சாது ஜனா சுகினோ பவந்து" என்பதைத் தான் கூறவேண்டும். சர்வே ஜனா என்றால் எல்லா மக்கள் என்று பொருள். சுகினோ பவந்து என்றால் சுகமாக இருக்கட்டும் என்று பொருள். எல்லா மக்கள் என்றால் அதில் திருடர்கள், போக்கிரிகள், கொலையாளிகள், ஏமாற்றுபவர்கள் என்பவர்களெல்லாம் அடங்கியவர்கள் தானே.

இவர்களும் சுகமாக இருக்க வேண்டும் என்றால் உலகில் திருட்டு, கொலை, பொய், புரட்டு, சூது, வாது போன்றவை இருந்து கொண்டே இருக்க வேண்டும் என்றல்லவா ஆகிவிடும். எனவே தான் 'சாது ஜனா' அதாவது நல்லவர்கள் என்று பொருள் தரும் சொல் இருக்க வேண்டும் என்று கூறுகிறேன்" என்றார்.

பண்டிதர்கள் 'திரு திரு'வென்று விழித்தார்கள். அப்போது விகடகவி எழுந்து "ஐயா! மகாகனம்பொருந்திய பண்டிதரே! நீர் சொல்வது தவறு" என்றான். அது கேட்டு கோவிந்தய்யாவின் முகம் சிவந்தது.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## வரவேற்காத குவளை மலர்கள்




பாணர்கள் சொன்ன பதில் அவனுக்குச் சந்தோசத்தைக் கொடுத்தது.

அப்படி என்ன பதில் சொல்லி விட்டார்கள் பாணர்கள்?

'பாண்டியனின் அரண்மனை நந்தவனத்துப் பூக்களின் வாசனையைச் சுமந்து கொண்டு வரும் மதுரைத் தென்றல் உன் முகத்தில் படவில்லையா, புலவர்கள் பாடும் பொதிகைத் தென்றலைக் காட்டிலும் இனிமையாக அது இல்லையா? மதுரைக்கு வெகு சமீபத்தில் இருக்கிறீர்கள் என்பதை அது உணர்த்தவில்லையா?'

இதைக் கேட்டவுடன் கோவலன், கண்ணகி, கவுந்தி அடிகள் மூவரும் உற்சாகத்தோடு புறப்பட்டார்கள். மதுரையை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

கிழக்கு வெளுக்க ஆரம்பிக்கும் போது அரண்மனையின் முரசொலியும் கோயிலிலிருந்து வந்த வேத கோஷமும் அவர்கள் காதில் விழுந்தன. நிம்மதிப் பெருமூச்சை வரவழைத்தன.

அப்பாடா! எவ்வளவு நீண்ட பயணம்! ஒருவழியாக முடிந்து விட்டது இனி கவலை இல்லை.

அவர்கள் நடக்க நடக்க ஓர் ஆறு கண்ணில் தெரிந்தது வைகை.

எப்போதும் போல் வைகை கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது.

அவர்கள் தொடர்ந்து நடந்து மரங்களும் பூங்கொடிகளும் நிறைந்த வைகை ஆற்றின் வடகரையை அடைந்தார்கள்.

அங்கே இக்கரையிலிருந்து அக்கரை நோக்கி வளர்ந்த பூங்கொடிகளும் அவற்றின் பூக்களும் நீரை மறைத்துக் கொண்டிருந்தன.

அதைப் பார்க்கும் போது கண்ணீரை அடக்கும் அழகிய பெண் போலத் தெரிந்தது.

அந்தக் கண்கொள்ளாக் காட்சியைப் பார்த்த கண்ணகி, இது நீர் ஆறு இல்லை பூ ஆறு என்றாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 72

**டான்பாஸ் என்பது தென் கிழக்கு உக்ரைனில் உள்ள ஒரு வரலாற்று, கலாசார மற்றும் பொருளாதாரப் பிரதேசமாகும். 2014 இல் நடந்த ரஷ்யா - உக்ரைனியப் போரின் விளைவாக டான்பாஸின் சில பகுதிகள் பிரிவினைவாத குழுக்களின் கட்டுப்பாட்டில் இருந்தன.**

இத்தாலிய மொழி இதழ் புவிசார் அரசியலின் லைம்ஸ் டிசெம்பர் 2015 முதல் கிரிமியாவை ரஷ்யாவின் ஒரு பகுதியாக வரைபடமாக்குகிறது. ஆப்பிள் ஆப் ஸ்டோரின் ரஷ்ய பதிப்பு 27 நவம்பர் 2019 அன்று முதல் ரஷ்யாவின் ஒரு பகுதியாக கிரிமியாவைக் காட்டத் தொடங்கியது.

உக்ரைன் கிரிமியாவை தனது பிரதேசமாக உரிமை கோருவதைத் தொடர்கிறது. 2015 ஆம் ஆண்டில் உக்ரைனிய பாராளுமன்றம் 20 பெப்ரவரி 2014 அன்று (அதிகாரபூர்வ) திகதியாக "கிரிமியாவின் தற்காலிக ஆக்கிரமிப்பு" தொடங்கும் திகதியாக அறிவித்தது.

தற்போதுள்ள அதிகாரபூர்வ மொழிகள் உக்ரைனியன், ரஷ்யன், கிரிமியன் டாடர் என்பனவாகும். அங்கு வாழும் மக்கள் 60.12% ரஷ்யர்கள், 25.78% உக்ரைனியர்கள் மற்றும் 14.1% கிரிமியன் டாடர்கள். உக்ரைன் கிரிமியாவை தனது பிரதேசமாக கருதினாலும் அது தன் (உக்ரைனின்) கட்டுப்பாட்டை இழந்ததோடு ரஷ்யாவின் தற்காலிகமாக ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசமாகவே உள்ளது.

### டான்பாஸ் போர்

இவை தோனேஸ்க் மக்கள் குடியரசு மற்றும் லுகன்ஸ்க் மக்கள் குடியரசு என்று பிரிவினைவாத குழுக்களால் அழைக்கப்படுகின்றன.

. டான்பாஸ் என்ற சொல் "டோனெட்ஸ் பேசின்" என்பதிலிருந்து உருவான சொல்லாகும். மேலும் கூறுவதானால் இது "டொனெட்ஸ் நிலக்கரி பேசின்" என்பதன் சுருக்கமாகும். டான்பாஸ் பிராந்தியத்தின் பரப்பிற்கு பல வரையறைகள் உள்ளன. ஆனால் இன்று பயன்பாட்டில் உள்ள பொதுவான வரையறை உக்ரைனின் தோனேஸ்க் மற்றும் லுகன்ஸ்க் மாநிலங்களாகும். அதேசமயம் வரலாற்று நிலக்கரி சுரங்கப் பகுதி இந்த பிராந்தியங்களின் பகுதிகளிலிருந்து விலக்கியுள்ளது.

மார்ச் 2014 இல், மைதான் எழுச்சி (எதிர்ப்பு) இயக்கம் மற்றும் அதன் விளைவாக உருவான கண்ணியப் புரட்சியைத் தொடர்ந்து, டான்பாஸின் பெரும் பகுதியில் உக்ரைன் அரசாங்கத்திற்கு எதிராக ரஷ்ய சார்பு கிளர்ச்சியாளர்களால் அமைதியின்மை ஏற்பட்டது.

இவ் அமைதியின்மையை பற்றிப் பார்க்குமுன் இப் பிரதேசங்கள் பற்றிப் பார்ப்போம்.

### லுகான்ஸ்க் மாநிலம்

லுகான்ஸ்க் மாநிலம் உக்ரைனின் கிழக்குப் பகுதி மாநிலம் (மாகாணம்) ஆகும். அதன் நிர்வாக மையம் லுகான்ஸ்க் நகரம் ஆகும். இம் மாநிலம் 1938 இல் நிறுவப்பட்டது. அதன் மக்கள்தொகை 2,121,322 (2021 மதிப்பீடு) என மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலம் 18 மாவட்டங்கள் மற்றும் 37 நகரங்களாக (பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த 14 நகரங்கள் உட்பட) பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு 26,684 சதுர கி.மீ ஆகும்.

தோனேஸ்க் மாநிலம் வோரோஷிலோவ்ஹ்ராட் மற்றும் ஸ்டாலினோ மாநிலங்களாக பிளவுபட்டது. ஸ்டாலினோ மாநிலம் இன்றைய தோனேஸ்க் மாநிலம் ஆகும். 1938 ஆம் ஆண்டு வோரோஷிலோவ்ஹ்ராட் மாநிலம் லுகான்ஸ்க் மாநிலமாக பெயர் பெற்றது.

1991 ஆம் ஆண்டு மார்ச் மாத வாக்கெடுப்பின் போது, இம் மாநிலத்தின் அனைத்து உக்ரைனியர்களில் 70.16% பேர் சோவியத் யூனியனின் ஒரு பகுதியாக இறையாண்மை கொண்ட குடியரசாக இருக்க வாக்களித்தனர். 27.99% பேர் மட்டுமே "இல்லை" என்று வாக்களித்தனர். ஆனால் டிசெம்பர் 1991 வாக்கெடுப்பில், மாநிலத்தில் 83.86% வாக்குகள் உக்ரைனின் சுதந்திரப் பிரகடனத்திற்கு ஆதரவாக இருந்தன.

இம் மாநிலத்தில் உக்ரைனிய இனத்தவர்கள் பெரும்பான்மையாக இருந்தாலும் (58.0%), மக்கள் தொகையில் பெரும்பாலானோர் ரஷ்ய மொழி பேசுபவர்கள் ஆவர். சிறுபான்மையினரில் பூர்வீக ரஷ்யர்கள் 39.1 வீதமும் பெலாரசியர்கள் 0.8 வீதமும் மற்றும் மற்றவர்கள் 1.4 வீதமும் ஆகும்.

லுகான்ஸ்கிற்கு கிழக்கே உள்ள ஸ்டானிட்சியா-லுகான்ஸ்கா மற்றும் க்ராஸ்னோடன் மாவட்டங்கள் தவிர மற்றைய அனைத்து மாவட்டங்களிலும் உக்ரைனியர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். கிராஸ்னோடன், ஸ்வெர்ட்லோவ்ஸ்க், க்ராஸ்னி லுச் மற்றும் ஸ்டாகானோவ் போன்ற பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களில் ரஷ்ய இனத்தவர்கள் பெரும்பான்மையாக உள்ளனர்.

(தொடரும்)

# எரிமலையில் ஏறிய 8 பேர் விழுந்து மரணம்

## ரஷ்யாவில் சம்பவம்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் எரிமலையொன்றின் உச்சியை நோக்கி ஏறிக்கொண்டிருந்த 8 பேர் வீழ்ந்து உயிரிழந்துள்ளனர். கிலுசெவ்ஸ்கயா சோப்கா எனும் எரிமலையில் கடந்த வாரம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ரஷ்யாவின் கம்செட்கா தீபகற்பத்தில் 160 இற்கும் அதிகமான எரிமலைகள்.உள்ளன. அவற்றில் மிக உயரமான எரிமலை கிலுசெவ்-ஸ்கயா. இதன் உயரம் 4754 மீற்றர் (15,597 அடிகள்) ஆகும். ஆசிய, ஐரோப்பிய நிலப்பரப்பில் செயற்படும் நிலையிலுள்ள மிக உயரமான எரிமலையும் இதுவாகும்.

1697 ஆம் ஆண்டு இந்த எரிமலை வெடித்தமை முதல் தடவையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போதும் இந்த எரிமலை அடிக்கடி வெடிப்பது வழக்கம். இந்த எரிமலையில் 12 பேர் கொண்ட ஒரு குழுவினர் சுமார் 13,000 அடி உயரத்தில் ஏறிகொண்டிருந்த போது சறுக்கி வீழ்ந்ததால் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

எரிமலையின் உச்சியிலிருந்து 1,600 அடி கீழே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த மலையானது எரிமலை பாறைகள் மற்றும் பனிக்கட்டிகளினால் ஆனவை. இம் மலையின் உயரமும் எரிமலை வெடிப்பு அபாயமும் இதில் ஏறும் மலையேறிகளுக்கு ஆபத்தானவை என அதிகாரிகள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உக்ரைன் அணுமின் நிலையம் பாதுகாப்பு வலயமாக அறிவிப்பு

## சர்வதேச அணுசக்தி அமைப்பு

(கீவ்)

**ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட உக்ரைனின் சபோரிஜியா அணுமின் நிலையத்தைச் சுற்றி பாதுகாப்பு வலயத்தை நிறுவுவதற்கு சர்வதேச அணுசக்தி அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.**

கடந்த வாரம் ஆலைக்கு கண்காணிப்பு குழுவை அனுப்பி ஆய்வு செய்த குறித்த அமைப்பு, தற்போதைய நிலைமை ஏற்றுக்கொள்ள முடியாதது என கூறியுள்ளது.

ஐரோப்பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையத்தின் ஆக்கிரமிப்பு அணுசக்தி பேரழிவு பற்றிய அச்சத்தைத் தூண்டியுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில் சபோரிஜியா அணுமின் நிலையம் பாதுகாப்பு வலயம் என சர்வதேச அணுசக்தி அமைப்பு அறிவித்துள்ள நிலையில்அதனை உக்ரைனிய ஜனாதிபதி வரவேற்றுள்ளார்.

போரின் தொடக்கத்தில் இருந்து ரஷ்யாவால் ஆக்கிரப்பில் உள்ள குறித்த ஆலையில் மீண்டும் மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கடந்த வாரம் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட விஜயத்தைத் தொடர்ந்து, ஷெல் தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என ஐ.நா உத்தரவிட்டது.

எனவே அணுமின் நிலையத்தின் பிரதேசத்தை இராணுவமயமாக்கும் நோக்கத்தில் பாதுகாப்பு வலயம் என அறிவித்தமையை ஆதரிப்பதாக உக்ரைனிய ஜனாதிபதி தெரிவித்தார். (நி)

# மீண்டும் இணையும் இந்தியா-ரஷ்யா



(டில்லி)

இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய இரண்டு நாடுகளும் மிகவும் வலுவான உறவினை கடைப்பிடித்து வருகின்ற சூழல் காணப்படுகின்றது.

இந்த நிலையில் பாதுகாப்பு மற்றும் இராணுவ தளபாடங்களை பரிமாறும் நிலையில் இருந்து ஒரு படி முன்னேறி தற்போது பொருளாதார மற்றும் சக்தி பரிமாற்ற உறவு முறைகள் குறித்த முன்னெடுப்பை இந்திய பிரதமர் மோடி மேற்கொண்டு வருவதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் குறித்து மேலும் தெரிய வருவதாவது, ரஷ்யா இந்தியாவிற்கு ஆயுத உபகரணங்களை தொடர்ந்தும் வழங்கும் என உறுதியளித்திருந்த நிலையில் .இந்திய பிரதமர் ரஷ்யாவிற்கு நன்றிகளை தெரிவித்திருந்ததோடு பொருளாதார மற்றும் சக்தி பரிமாற்றங்களையும் மேற்கொள்ள முடியும் என தெரிவித்திருக்கின்றார்.

இந்த நிலையில் ரஷ்ய நிறுவனங்களுக்கு இந்தியாவில் முதலிட வாய்ப்புக்களை வழங்கப் போவதாகவும் குறிப்பாக அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட நிறுவனங்ளை இந்தியாவில் முதலீடு செய்யவிருப்பதாகவும் இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலுகைகள் வழங்காவிட்டால் 45 லட்சம் பேர் வேலையிழக்க நேரிடும்

## உள்ளூர் வணிக பாதுகாப்புச் சபை தகவல்

(கொழும்பு)

அரசு மற்றும் தனியார் வங்கிகள் கடன் மற்றும் வட்டி விகிதங்களில் சலுகைகளை வழங்காவிட்டால் 45 லட்சம் பேர் வேலை இழக்க நேரிடும் என்று உள்ளூர் வணிக பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

வற் வரி அதிகரிப்பினால் தாம் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாக நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

# இலங்கைக்கு விரைகிறார் சமந்தா பவர்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் உதவித் திட்டத்தின் தலைவியும் அமெரிக்க ராஜ தந்திரியுமான திருமதி. சமந்தா பவர் நாளை சனிக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

இந்த விஜயத்தின் போது பவர் அரசாங்கத்தின் பிரதிநிதிகளையும் எதிர்கட்சி பிரதிநிதிகளையும் சந்திக்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பொதுவாக மனித உரிமைகளில் அதிக கவனம் செலுத்தும் அதிகாரியாக சமந்தா பவர் பார்க்கப்படுகிறார்.

அதன்படி ஜெனிவாவில் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அமர்வு ஆரம்பமாகியுள்ள நிலையில் பவரின் இலங்கைப் பயணம் மிகவும் முக்கியமான ஒன்றாக அமையும் என பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். (நி)

# இராஜாங்க அமைச்சு பதவியேற்ற சு.க உறுப்பினர்களை நீக்க தீர்மானம்

(கொழும்பு)

கட்சியின் தீர்மானத்திற்கு மதிப்பளிக்காமல் இராஜாங்க அமைச்சுப் பதவிகளைப் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்குவதற்கு கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, லசந்த அழகியவன்ன, ஜகத் புஸ்பகுமார, சாமர சம்பத் தச நாயக்க ஆகிய 4 பேர் நேற்று இராஜாங்க அமைச்சர் பதவிகளை பெற்றுள்ளனர்.

இந்த நிலையிலேயே இவர்களை கட்சியில் இருந்து நீக்குவதற்கு கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (நி)

# பயணக்கட்டுப்பாடுகளை தளர்த்திய நெதர்லாந்து, நியூசிலாந்து

(கொழும்பு)

நெதர்லாந்து மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் இலங்கைக்கு விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளன.

இதுவரை 11 நாடுகள் இலங்கைக்கான பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளன. (நி)

# நாட்டின் அந்நியச்செலாவணி கையிருப்பு வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டின் அந்நியச்செலாவணி கையிருப்பானது வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி உத்தியோகபூர்வ அந்நியச்செலாவணி கையிருப்பு 2022 ஜூலையில் இருந்து 1817 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 2022 ஒகஸ்டில் 1716 அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது. (நி)

# நீதிமன்றத்தை அவமதித்த நிஷாந்தவுக்கு இராஜாங்க அமைச்சு பதவி

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சர்களின் பதவிப் பிரமாண நிகழ்வு நேற்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் இடம்பெற்றது.

அதன்படி 37 புதிய அமைச்சர்கள் நேற்று பதவியேற்றனர். இதையடுத்து மைனா கோ கம, கோட்டா கோ கம மீது தாக்குதல் நடத்தியதுடன் நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றம் சாட்டப்பட்ட சனத் நிஷாந்தவும் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அவர் நீர் வழங்கல் துறை இராஜாங்க அமைச்சராக பதவியேற்றார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 25 ¾ சூரி 6 செவ் 5 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: A/L படித்த பெண்<br>தொ.இ: B/12919 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 27 ¾ சூரி 10 செவ் 12 இல்<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: வைத்தியர் வெளிநாடாயின் அவுஸ்திரேலியா மட்டும்<br>தொ.இ:G/12918 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: சூரி, செவ் 11 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: கலைப்பட்டதாரி காசாளர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி லண்டன் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12920 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: சூரி 8 செவ் 7 இல் உயரம்:5'5"<br>தகைமை/தொழில் மருத்துவபீட இறுதியாண்டு மாணவி<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ: G/12922 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 31 சூரி, செவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L சொந்தத்தொழில்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12921 | பிறப்பு: 1996 கிறிஸ்தவம் RC<br>உயரம் : 5'1"<br>தகைமை/தொழில்: Software Engineering (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம்<br>தொ.இ:G/12926 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 9 ¾ சூரி 2 செவ் 11 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: மேசன்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12923 | பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: சூரி 9 செவ் 5 இல் உயரம்:5'2"<br>தகைமை/தொழில் : B.Pham (Hons) மருந்தாளர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ:G/12927 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# மூன்றரை மாதங்களில் அறுவடை புதிய நெல் வகை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மூன்றரை மாதங்களில் அறுவடை செய்யக்கூடிய புதிய நெல் வகையொன்று காலி-லபுதுவ அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தினால் கண்டறியப்பட்டுள்ளது.

12 வருட ஆராய்ச்சியின் பலனாக இந்த புதிய நெல் வகை கண்டறியப்பட்டுள்ளது.

"எல்.டி 376" என பெயரிடப்பட்டுள்ள குறித்த நெல் வகையானது நாட்டின் எந்தப் பகுதியிலும் பயிரிட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# அனைத்து பாடசாலைகளிலும் ஆங்கில மொழி மூலமான கல்வி

## கல்வி அமைச்சு திட்டம்

(கொழும்பு)

கல்வி மறுசீரமைப்புடன், அடுத்த வருடம் முதல் தரம் ஒன்றிலிருந்து அனைத்து பாடசாலைகளிலும் ஆங்கில மொழி மூலமான கல்வியை அறிமுகப்படுத்த கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். "ஆங்கிலம் எளிமையானது" என்ற தொனிப்பொருளில் அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர், கிராமப்புறங்களில் உள்ள சிறுவர்கள் புதிய தொழில்நுட்பத்துடன் உலகத்தில் அச்சமின்றி பயணிக்க உதவும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (நி)

# அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஏமாற்றும் அரசாங்கம்-செல்வம் எம்.பி

(கொழும்பு)



அரசியல் கைதிகளை விடுவிப்போம் என ஒவ்வொரு ஜனாதிபதியும் கூறி வரும் நிலையில் தற்போது வரை எந்த முடிவும் கிடைக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய சபை அமர்வில் உரையாற்றிய அவர், மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசு எம்மை ஏமாற்றி வருகிறது. அரசியல் கைதிகள் விடுவிப்பு தொடர்பில் தற்போது உள்ள ஜனாதிபதியை நாம் சந்தித்தோம். அவரும் விடுவிப்போம் என்றார்.

ஆனால் இன்று வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர்களுக்கு வழக்கு பதிவு செய்யப்படாமலே சிறையில் வாடுகின்றனர். அவர்கள் சிறையில் இறந்தாலும் தீர்வு கிடைக்காது என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நமக்கு மிகவும் பிடித்தமான காட்சிகள் எப்போதும் நம் துயரமான சிந்தனைகளை வெளியே சொல்வனவாகவே அமைந்துள்ளன. ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வரம்பு கட்டாமல் நெல் விளையுமோ மக்காள்

மன்னர் சபையில் புலவர்கள் கூடியிருக்கின்றனர்.

மன்னனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெறுவது புலவர்களின் தொழில்.

அவ்வாறான புலவர் மரபில் மன்னனைப் போற்றவும் வாழ்த்தவும் புலவர்கள் பாடிக் கொண்டிருந்தனர்.

இப்போது எங்கள் தமிழ்ப் பாட்டி ஒளவையார் பாடுவதற்கான நேரம்.

மெல்ல எழுந்த நம் தமிழ் மூதாட்டி **வரப்புயர** என்று கூறி அமர்ந்தார்.

சபையில் ஒரே சலசலப்பு. எதுவும் விளங்கவில்லை என்பது ஒரு குறை.

அதற்கு மேலாக, தொக்கி நிற்கும் ஒற்றை வரி உணர்த்தி நிற்கும் பொருள் யாது? என்ற தெளிவின்மையும் சேர்ந்து சபையில் சலசலப்பு ஏற்படலாயிற்று.

ஒளவையே! தங்கள் பாட்டை முழுமைப் படுத்துக என்ற கோரிக்கை மன்னர் சபையில் எழ, ஒளவையார்;

***வரப்புயர நீர் உயரும்: நீர் உயர நெல் உயரும்: நெல் உயர குடி உயரும்: குடி உயரக் கோன் உயர்வான்***

என வரப்புயர என்பதை முழுமைப்படுத்தினார்.

ஒளவையார் தந்த பாடலின் பொருள் கண்டு மன்னனும் புலவர் பெருமக்களும் அவரைப் பாராட்டினர்.

ஆம், வரம்பு உயர்ந்தால் மட்டுமே நிறைந்த மழை நீர் தேங்கி நிற்கும். அவ்வாறு மழைநீர் தேங்குவதற்காக வரம்பு கட்டப்பட வேண்டும்.

வரம்பை உயரக் கட்டுவதன் மூலமே நெல்லின் விளைச்சலை அதிகரிக்க முடியும்.

ஆக, நம் மூதாட்டி ஒளவை பாடிய வரப்புயர என்ற பாடல் வேளாண் செய் விவசாயிகளுக்கானது.

வேளாண்மை செய்ய வேண்டுமானால் - நெல் விதைத்து உச்ச அறுவடையைப் பெற வேண்டுமாயின், நெல்லை விதைப்பதற்கு முன்னதாக வரம்பு கட்ட வேண்டும்.

அதைச் செய்யாதவிடத்து பின்னர் வரம்பைக் கட்ட முடியாது.

ஆனால், விவசாயிகளுக்கு ஒளவையார் கூறிய அறிவுரை இன்று செயலிழந்து போயிற்று.

ஆம், இன்றைய வேளாண் செய் விவசாயிகள் வரம்பு கட்டாமல் நெல் விதைக்கின்ற முறையை பின்பற்றுகின்றனர்.

உண்மையில் வரம்பு கட்டாமல் நெல் விதைப்பவர்கள் இருப்பார்களாயின், அவர்கள் விவசாயிகளே அல்ல.

அவர்களுக்கு விவசாயத்தின் அடிப்படையே புரியவில்லை.

மாறாக, வியாபார சிந்தனை கொண்டவர்களால் மட்டுமே வரம்பு கட்டாமல் நெல் விதைக்க முடியும்.

ஆம், செயற்கை உரத்தைக் கொட்டி நெல் விளைச்சலை அதிகரித்து உணவை நஞ்சாக்குவோர், வரம்பு கட்டுவதை ஒருபோதும் விரும்புவதில்லை என்பதுதான் உண்மை.

எதுவாயினும் ஒளவையார் கூறிய வரப்புயர என்ற தத்துவத்தை தயவுசெய்து நம் நெற்செய்கையாளர்கள் தம் சிந்தையில் நிறுத்திச் செயலாற்ற வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

# பச்சை குத்துதல் கலையை பயிற்சியின்றி முன்னெடுப்பது ஆபத்து

### சுகாதாரத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

பச்சைகுத்தல் கலையை முறையான பயிற்சியின்றி முன்னெடுப்பது ஆபத்தானது என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

நாட்டில் பச்சை குத்தல் துறையில் ஈடுபடும் பெரும்பாலானோர், முறையான பயிற்சிகளில் ஈடுபடவில்லை என்பது தெரிய வந்துள்ளதாக அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பச்சை குத்தலுக்காக பயன்படுத்தப்படும் சாயங்கள் தொடர்பில் முறையான ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படாமை மற்றும் அதற்காக பயன்படுத்தப்படும் ஊசிகளை சகலருக்கும் பயன்படுத்தப்படுகின்றமை போன்ற செயற்பாடுகளால் மனித உடலுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் என பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன குறிப்பிட்டார். இத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு முறையான பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

அவ்வாறு பயிற்சி பெறாத பச்சை குத்தல் துறையில் ஈடுபடுபவர்களை கண்டறிய விசேட தேடுதல்களை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## வாகன உதிரிப்பாகங்களின் விலை வரலாறு காணாத அளவில் உயர்வு

(கொழும்பு)

நாட்டில் வாகன இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில் வாகன உதிரிப்பாகங்களின் விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்துள்ளது.

இதற்கமைய மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள், கார்கள், பேருந்துகள் போன்றவற்றின் சில்லுகள், பேட்டரிகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன.

நீண்ட நாட்களாக சந்தையில் சில உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யப்படாமையினால் வாகன உதிரிப் பாகங்களின் விலை நூற்றுக்கு முந்நூறு சதவீதம் எனும் விகிதத்தில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அரிசி இறக்குமதி இடைநிறுத்தம்

### விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

அரிசி இறக்குமதியை இடைநிறுத்துவதற்கான எழுத்துமூல அறிவித்தல் ஏற்கனவே உரிய அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு போகத்தில் மொத்தம் 512,000 ஹெக்டேயர் நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். அரசாங்கம் 275,000 ஹெக்டேயர் நெற்செய்கைக்காக மதிப்பீடு செய்திருந்தது. ஆனால் கடினமான சூழ்நிலையிலும் விவசாயிகள் தங்கள் வயல்களில் வெற்றிகரமாக செய்கை செய்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## இரட்டிப்பாக அதிகரித்த சவப்பெட்டிகளின் விலை

(கொழும்பு)

சவப்பெட்டிகளின் விலை மற்றும் இறுதிக் கிரியைகளுக்கான ஏனைய கட்டணங்களும் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளன.

இதன் காரணமாக இறந்தவர்களுக்காக, இருப்பவர்கள் பெரும் இன்னல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

30 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட சவப்பெட்டியின் விலை தற்போது 60 ஆயிரம் ரூபா வரை அதிகரித்துள்ளது.

அத்துடன், அமரர் ஊர்தி வாடகை, மலர் வளையங்களின் விலை உட்பட சகல சேவைகளினதும் கட்டணங்கள் வெகுவாக அதிகரித்துள்ளன. (நி)

## 50 வீதமான மக்களுக்கு விற்றமின் D குறைபாடு

### மருத்துவ நிபுணர் நிரஞ்சலா மீகொட விதான தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் சனத்தொகையில் சுமார் 50 வீதமானவர்கள் விற்றமின் D குறைபாடுடன் காணப்படுவதாக களுபோவில போதனா மருத்துவமனையின் உட்சுரப்பியல் நிபுணர் மருத்துவர் நிரஞ்சலா மீகொட விதான தெரிவித்தார்.

விற்றமின் D குறைபாட்டால் மக்கள் பல்வேறு நோய்கள் மற்றும் துன்பங்களுக்கு உள்ளாகுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சூரிய ஒளி மூலம் சாதாரண மக்கள் தங்களுக்குத் தேவையான விற்றமின் D யைப் பெற முடியும் எனவும் இது மிகவும் எளிமையான முறை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு 'சராசரி நபர் வாரத்தில் மூன்று நாட்கள் ஒரு நாளைக்கு அரை மணி நேரம் சூரிய ஒளியில் இருப்பது முக்கியமானது எனவும் அவர் தெரிவித்தார் (நி)

# மோதல் சம்பவம் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு - வாழைத்தோட்டம் பகுதியில் சிலரிடையே ஏற்பட்ட மோதலின்போது ஆயுதங்களால் தாக்கப்பட்டதில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த மோதல் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு - 12 பகுதியைச் சேர்ந்த 43 வயதான நபரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த பெண் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம)

## டிசம்பர் மாதம் வரை மின்வெட்டு அவசியமில்லை

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை மின்வெட்டு தேவைப்படாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்னக்க, தற்போது மின்சாரத் தேவை குறைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

"கடந்த வாரம் தினமும் ஒரு மணி நேரம் மின்வெட்டு இடம்பெறும் என்று அறிவித்திருந்த போதிலும் அந்த ஒரு மணித்தியால மின்வெட்டும் மேற்கொள்ளப்படவில்லை. 3ஆம் திகதியில் இருந்து இன்று வரை மின்வெட்டு இல்லை. அதற்குக் காரணம் நம்மிடம் இருக்கும் மின்சாரத்தின் தேவை குறைந்துள்ளது.

எனவே, மின்வெட்டுக்கு அவசியம் ஏற்படவில்லை. 5ஆம் திகதி வழங்கல் அதிகரித்துள்ளது.

தேவையான அளவை விட அதிகளவில் உற்பத்தி செய்யும் திறன் எங்களிடம் தற்போது உள்ளது. எனவே, இந்த நிலக்கரி பிரச்சினை எதிர்வரும் இரண்டு மூன்று வாரங்களுக்கு வரவில்லை என்றால் ஒரு மணித்தியால மின்வெட்டும் மேற் கொள்ளப்படாது.

தேவையான அளவு தண்ணீர் இருந்தால், நிலக்கரி இருந்தால், வரும் டிசம்பர் மாதம் வரை மின்வெட்டுக்கு செல்ல வேண்டிய அவசியம் இருக்காது என்று தெரிவித்தார். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** எஸ்.ஆர் அரிசி ஆலையடி, ஸ்கந்தபுரம், அக்கராயன், கண்ணகிபுரம், விநாயகர் குடியிருப்பு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா மாவட்டத்தில்
# போதை ஊசி பயன்படுத்தும் சிறுவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியாவில் அண்மைய சில காலமாக சிறுவர் மத்தியில் போதைப் பயன்பாடுகள் ஊசி ஏற்றும் நடவடிக்கைகள் சிறுவர்கள் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்கள் மத்தியில் அதிகரிக்கின்றன.

இந்நடவடிக்கைகளை கட்டுப்படுத்த பொலிஸார், பெற்றோர்கள் மற்றும் அரச நிறுவனங்கள் முன்வரவேண்டும். மாணவர்கள் தவறான வழிகளில் சென்றால் அவர்களின் எதிர்காலம் சிதைவடைந்து விடும் எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகள் மீது அதிக கவனமுடன் செயற்பட வேண்டும் என தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவரும் சமூக ஆர்வலருமான எஸ்.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இன்றைய நிலைமைகளில் 16 வயதிலிருந்து 22 வயதிற்குட்பட்ட பாடசாலை செல்லும் மாணவர்கள் பல்வேறு போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகிவருகின்றனர். அத்துடன் வவுனியாவில் அண்மைய சில காலமாக போதைப் பயன்பாடுகள் ஊசி மூலம் ஏற்றும் செயற்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றன.

இவ்வாறான சிலர் அடையாளம் காணப்பட்டு பொலிஸாரின் உதவியுடன் வெலிக்கந்தை புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். 16 வயதிற்குட்பட்ட பாடசாலை செல்லும் மாணவர்களே அதிகளவில் காணப்படுகின்றனர்.

எனவே, பெற்றோர்கள் தமது பிள்ளைகளில் அதிக கவனம் செலுத்தி அவர்கள் எங்கு செல்கின்றார்கள் யாருடன் பழக்கம் வைத்திருக்கின்றார்கள் எவ்வாறான நிலைமைகளில் வீடு வருகின்றார்கள் என்ற தகவல்களை துல்லியமாக அறிந்து வைத்திருக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (4-299)

## வடக்கு சுகாதாரத் துறையை
# மேம்படுத்த சிங்கப்பூர் உதவி

(அராலி)

வடக்கு மாகாண சுகாதாரத் துறையை மேம்படுத்த சிங்கப்பூர் அரசாங்கத்தின் உதவி தொடர்பில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் சிங்கப்பூர் முன்னாள் துணைப் பிரதமரும் சிரேஷ்ட அமைச்சருமான தர்மன் சண்முகரத்தினத்துடனான சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை சிங்கப்பூரில் இடம்பெற்றது.

சிங்கப்பூரில் இடம்பெற்ற மாநாடு ஒன்றுக்காக சென்றிருந்த வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வடக்கு அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு தரப்புகளையும் சந்தித்து கலந்துரையாடி வருகிறார்.

இவ்வாறான சந்திப்பில் வடக்கு மாகாண சுகாதாரத் துறையை நவீனப்படுத்துவது தொடர்பில் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் சிரேஷ்ட அமைச்சரும் சிங்கப்பூரின் முதல் தமிழ் துணைப் பிரதமருமான தர்மன் சண்முகரத்தினத்தை வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சந்தித்தார்.

கலந்துரையாடலில் சிரேஷ்ட அமைச்சர் சண்முகரத்தினம் வடக்கு சுகாதாரத் துறையை மேம்படுத்த சிங்கப்பூர் அரசாங்கம் தனது காத்திரமான பங்கை வழங்கத் தயாராக இருப்பதாக ஆளுநரிடம் உறுதி அளித்துள்ளார்.(4-104)

# வடக்கு சுகாதார பணிப்பாளர் யாழ்.போதனாவிற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளராக கடமைகளைப் பொறுப்பேற்ற மருத்துவர் திலிப் லியனகே நேற்று யாழ். போதனா மருத்துவமனைக்கு வருகை தந்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் கலாநிதி.த.சத்தியமூர்த்தியுடன் சந்திப்பில் ஈடுபட்டார். இச் சந்திப்பின் போது மருத்துவமனையின் அவசர தேவைக்கான மருத்துவ உதவிகள், இடர்காலத்திற்கான ஒதுக்கீடுகள் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் முன்னெடுக்கப்படவுள்ள சேவைகள் பற்றி கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-33-104)

# 1500 கிலோ மஞ்சள் விசேட அதிரடிப்படையால் மீட்பு

(முறிகண்டி)

சட்ட விரோதமான முறையில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட மஞ்சளை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

சட்ட விரோதமான முறையில், இறக்குமதி செய்வதற்கு தடைசெய்யப்பட்ட ஒரு தொகை மஞ்சள் கடத்தப்படுவது தொடர்பில் இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

36 பாரிய மூட்டைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1500 கிலோகிராம் மஞ்சளை இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இணைந்து நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

இதன் போது, பூநகரி வலைப்பாடு பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.



மேலதிக விசாரணைகளுக்காக மீட்கப்பட்ட மஞ்சள் ஜெயபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (4-100)

## மணல் ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் மணல் ஏலவிற்பனையானது எதிர்வரும் 17 ஆம் திகதியன்று காலை 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# பயன்பாடுகள் இன்றி காணப்படும் புழுதியாறு குள நீர்ப்பாசனத் திட்டம்

(கண்டாவளை)

கிளிநாச்சி மாயவனூர் புழுதியாறு குளத்தின் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் 32 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு எட்டு ஆண்டுகளுக்கு மேலாக செயலிழந்த நிலையில் காணப்படுவதுடன் குறித்த பிரதேசத்தில் தற்போது வறுமை, குடிநீர் இன்மை என பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு மலையகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மலையகத் தமிழ் மக்களே மாயவனூர் பகுதியில் அதிகம் வசித்து வருகின்றனர்.

அடிப்படை வாழ்வாதார வசதிகள் எதுவும் அற்ற நிலையிலும் தற்போதைய வரட்சி காரணமாக குறித்த பகுதியில் கிணறுகளில் கூடத் தண்ணீரில்லாத நிலை காணப்படுகின்றது.

குறித்த பிரதேசத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையால் 320 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனம் முற்றுமுழுதாக செயலிழந்துள்ளது.

அதாவது 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகளில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து 320 இலட்சம் ரூபாய் செலவில் உப உணவு பயிர்ச்செய்கையை நோக்கமாகக் கொண்டு மாயவனூர் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனம் தற்போது எவ்வித பயன்பாடும் இன்றிக் காணப்படுகிறது.

இவ்வாறு பெருந்தொகையான நிதியைச் செலவிட்டும் குறித்த கிராமத்தில் வாழும் மக்களுக்கு எந்த நன்மைகளும் ஏற்படவில்லை. தற்போது குடிநீர் வசதியின்மை, வாழ்வாதார வசதியின்மை மற்றும் வறுமை காரணமாக பல்வேறு நெருக்கடிகளை குறித்த பிரதேச மக்கள் எதிர்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர். (4-315)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 250 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 220 | 300 | 280 | 300 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 300 | 300 |
| தக்காளி | 240 | 150 | 200 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 200 |
| கோவா | 400 | 400 | 450 | 400 |
| கரட் | 320 | 350 | 400 | 450 |
| பூசணி | 140 | 120 | 140 | 150 |
| புடோல் | 100 | 180 | 120 | 100 |
| வாழைக்காய் | 250 | 200 | 180 | 140 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 80 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 450 | 650 | 500 | 500 |
| வெண்டிக்காய் | 100 | 160 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 250 |
| லீக்ஸ் | 350 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 160 | 150 | 160 | 200 |
| கறிமிளகாய் | 800 | 600 | 50 | 600 |
| முருங்கைக்காய் | 600 | 1200 | 500 | 800 |
| போஞ்சி | 500 | 450 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | 280 | 200 |
| கீரை - 1 பிடி | 140 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 100 | 60-90 |
| இராசவள்ளி | 220 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 350 | 220 | 320 |
| முள்ளங்கி | 140 | 160 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 25 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 80 | 120 | 150 |

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 61 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள் வங்கி யாழ்.பிராந்தியமும் இலங்கை வங்கி ஊழியர் சங்கமும் (மக்கள் வங்கிக் கிளை) இணைந்து நடத்துகின்ற இரத்த தான முகாம், மக்கள் வங்கி கொடிகாம கிளையில் நாளை மறுதினம் 11 ஆம் திகதி காலை 8 மணி முதல் பி.ப 1 மணி வரை இடம்பெறவுள்ளது. (4)

## நிறுவுநர் தினமும் பரிசில் நாளும்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி நிறுவுநர் தினமும் பரிசில் நாளும் நாளை சனிக்கிழமை 10 ஆம் திகதி காலை 8 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் அதிபர் சி.திரிகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரத்தால்...

மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பாக்கியநாதன் ஜோசப் இம்மானுவேல் (வயது - 66) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் மரத்தில் இருந்த கொப்புகளை வெட்டுவதற்காக ஏறிய வேளையே மரத்தில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்தார்.

இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-33,104)

## 37 இராஜாங்க...

வியாழேந்திரன், பிள்ளையான், சுரேன் ராகவன் உள்ளிட்ட 37 பேர் இராஜாங்க அமைச்சர்களாக ரணிலின் அரசாங்கத்தில் நேற்று பதவியேற்றுக் கொண்டனர்.

பதவியேற்ற 37 புதிய இராஜாங்க அமைச்சர்களின் விபரம் பின்வருமாறு,

01. ஜகத் புஷ்பகுமார - வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர்.
02.ரஞ்சித் சியாம்பலாபிட்டிய - நிதி இராஜாங்க அமைச்சர்.
03. லசந்த அழகியவன்ன - போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்.
04. திலும் அமுனுகம - முதலீடு மற்றும் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர்.
05. கனக ஹேரத் - தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்.
06. ஜானக வக்கும்புர - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்.
07. செஹான் சேமசிங்க - நிதி இராஜாங்க அமைச்சர்.
08. மொஹான் பிரியதர்ஷன் டி சில்வா - விவசாய இராஜாங்க அமைச்சர்.
09. தேனுக விதானகே - பொருளாதார அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்.
10. பிரமித பண்டார தென்னகோன் - பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்.
11. ரோஹண திஸாநாயக்க -.விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர்.
12. அருந்திக பெர்னாண்டோ - நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்.
13. விஜித பேருகொட - பிரிவெனா கல்வி இராஜாங்க அமைச்சர்.
14. லொஹான் ரத்வத்த - பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்.
15. தாரக பாலசூரிய - வெளிவிவகார இராஜாங்க அமைச்சர்.
16. இந்திக்க அனுருத்த - மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர்.
17. சனத் நிஷாந்த - நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்.
18. சிறிபால கம்லத் - நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்.
19. சாந்த பண்டார - ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர்.
20. அனுராத ஜயரத்ன - நீதி மற்றும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர்.
21. சதாசிவம் வியாழேந்திரன் - வர்த்தக இராஜாங்க அமைச்சர்.
22. சிசிர ஜெயக்கொடி - சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர்.
23. பியால் நிஷாந்த டி சில்வா - கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்.
24. பிரசன்ன ரணவீர - சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் இராஜாங்க அமைச்சர்.
25. டி.வி.சானக்க - வனவிலங்கு மற்றும் வன வளங்கள் இராஜாங்க அமைச்சர்.
26. டி.பி.ஹேரத் - வள அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சர்.
27. ஷசீந்திர ராஜபக்ஷ - நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்.
28. சீதா அரம்பேபொல - சுகாதார இராஜாங்க அமைச்சர்.
29. காதர் மஸ்தான் - கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்.
30. அசோக பிரியந்த - உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்.
31. அரவிந்தகுமார் - கல்வி இராஜாங்க அமைச்சர்.
32. கீதா குமாரசிங்க - பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார இராஜாங்க அமைச்சர்.
33. சிவநேசதுரை சந்திரகாந்தன் - கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்.
34. சுரேன் ராகவன் - உயர்கல்வி இராஜாங்க அமைச்சர்.
35. டயானா கமகே - சுற்றுலா இராஜாங்க அமைச்சர்.
36. சாமர தசநாயக்க - ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்.
37. அனுப பாஸ்குவல் - சமூக அதிகாரமளித்தல் இராஜாங்க அமைச்சர். (ம)



















## பிக்கு மாணவர்...

யாவசிய தேவைகளின் விலை உயர்வு ஏற்பட்டுள்ளமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான பிக்குகள் கலந்து கொண்டதுடன், தமது கோரிக்கைகளை வலியுறுத்தும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். (ம)

## சமூக பாதுகாப்பு...

வரி சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்படி, சட்டமூலத்திற்கு ஆதரவாக 91 வாக்குகளும் சட்டமூலத்திற்கு எதிராக 10 வாக்குகளும் கிடைக்கப்பட்டிருந்தன.

இதற்கமைய, 81 வாக்குகளால் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம)

## சீமெந்து...

பொருட்களுக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிப்பது தொடர்பான பரிசீலனையை நுகர்வோர் விவகார அதிகாரசபை மேற்கொண்டு வருவதாக அறியமுடிகிறது.

பொருளாதார ஸ்திரமின்மைக்கு மத்தியில் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான வழிகளைக் கண்டறிந்து உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு வர்த்தக அமைச்சருக்கு ஜனாதிபதி விடுத்த பணிப்புரைக்கு அமையவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ம-7)

## மகா...

படுத்தும் வகையில் பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்டுள்ள அறிக்கையில், "ராணி நேற்று பிற்பகல் போல் மோரலில் அமைதியாக மரணமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக உடல் நிலை குறித்து மருத்துவர்கள் கவலை அடைந்ததை அடுத்து போல் மோரலில் மருத்துவக் கண்காணிப்பில் அவர் இருப்பதாக பக்கிங்காம் அரண்மனை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அரச...

போன்றவர்களை அரசாங்கம் வெறுப்பதாகவும் அவர்களைக்

# இலங்கையர் சுட்டுக்கொலை

பிலிப்பைன்ஸில் இலங்கை தொழிலதிபர் அடையாளம் தெரியாத ஆயுததாரியால் நடுவீதியில் வைத்து நேற்றுப் பிற்பகல் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.(ம)

கண்ட இடத்தில் கைது செய்வதற்கு அரசாங்கம் சிந்தித்து வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ,

கலைஞர் தமிதா அபேரத்னவுக்கு 9 ஆம் திகதியே பொலிஸில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் ஆனால் அவர் தியத உயன போராட்டத்தில் ஈடுபட்டபோது உடன் கைது செய்யப்பட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம)

## நிச்சயமற்ற...

றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர், தற்போதைய நிலைவரத்தை கருத்தில் கொண்டு டெண்டர் முறையின் மூலம் நிலக்கரியை வழங்குவதற்கு இணங்கிய நிறுவனம் அதற்கு முன்வர தயங்குவதாக குறிப்பிட்டார். (ம)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தை வலுப்படுத்த தேசிய வேலைத் திட்டம் ஆரம்பம்

## பிரதமர் தினேஸ் குணவர்தன

(கொழும்பு)

கிராம அலுவலகர் பிரிவு மட்டத்திலிருந்து சகல தரப்பினரையும் இணைத்து நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு தேவையான தேசிய வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக பிரதமர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கிராம அலுவலகர் பிரிவு மற்றும் கிராமிய பொருளாதார மறுசீரமைப்பு கேந்திரமாக உடனடியாக வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக, நாடுபூராகவும் உள்ள மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட அரச சேவையாளர்களை தெளிவுபடுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடுபூராகவும் பொருளாதார மறுசீரமைப்பு கேந்திர நிலையங்களை, இரண்டும் வாரத்திற்குள் அமைக்கவுள்ளதாக மாவட்ட செயலாளர்கள் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள், உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு செயலாளர் ஆகியோர், பிரதமர் தினேஸ் குணவர்தனவிடம் உறுதியளித்துள்ளனர்.

இதன்படி, குறித்த குழு எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் ஸ்தாபித்து நிறைவுறுத்த உள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ம)


## வட இந்திய காசி யாத்திரை

ஆரம்பம் 05.10.2022 நாட்கள் 12

டெல்லி, மதுரா, தாஜ்மஹால், அலகாபாத், திருவேணி சங்கமம், கயா, புத்தகயா, புத்தாலயங்கள், காசி விஸ்வநாதர், இராமேஸ்வரம், மதுரை, பிரம்மபுரிஸ்வரர் சிவன், சென்னையில் ஒருநாள் சொப்பிங்.

அனைத்துச் செலவுகளும் உட்பட விபரங்கட்கு:
கலாநிதி: T.ஸ்ரீரெங்கநாதன்
077 768 0102 (C-4886)


# மரண அறிவித்தல்



பிறப்பு 02 - 07 - 1930

இறப்பு 08 - 09 - 2022

## ஸ்ரீமதி பத்மாவதி நன்னித்தம்பி
### (புன்னாலைக்கட்டுவன்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை வாழ்விடமாகவும் கொண்ட ஸ்ரீமதி பத்மாவதி நன்னித்தம்பி அவர்கள் நேற்று (08.09.2022) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சினியர் அம்பலவாணர் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இளையதம்பி - வன்னிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வைத்தியக் கலாநிதி நன்னித்தம்பி அவர்களின் அன்பு மனைவியும் தயாவதி(கனடா) அவர்களின் அன்புத் தாயாரும் மண்டலசேகரம் சபாநடேசன் அவர்களின் அன்பு மாமியாரும் வினோத், சஜித் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி தர்மலிங்கம், தேவி(தேவி ரீச்சர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாடநூல் ஆசிரியரும் சுகாதார போதனாசிரியருமான காலஞ்சென்ற தர்மலிங்கம் அவர்களின் அன்பு மைத்துனியும், லோகராணி பாலேந்திரன், விஜயராணி பத்மநாதன், யோகராணி வன்னியசேகரம், தர்மராணி ஜெகநாதன், சுண்முகதாசன் (ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர்), யுகேந்திரராஜா, நந்தகுமாரன் (ஓய்வு பெற்ற ஆசிரியர் சென். ஜோன்ஸ் கல்லூரி), காலஞ்சென்றவர்களான வைத்திய கலாநிதி இந்திராணி சத்தியநாதன், சிறீஸ்கந்தராஜா, தயாபரன், முரளிதரன் ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும் உமேஷ்-ஷியாமளா, ரமேஷ்-உஷா, யதிஷ்-கல்பனா, நந்தினி-யோகேஸ்வரன், ரஜனி-பிலிக்ஸ், சுரிகரன், காலஞ்சென்ற மயூரன், லிங்கரன்-பத்மலோஜனி, சுதாகரன்-சுகன்யா, லௌமீகரன்-சுகந்தி, பிங்கலன்-தக்சினி, ஷேந்தன்-கீர்த்தனா, சுரிகேஷன்-மதுரா, லவண்யா, லவகேஷன், கோசல்யா, தனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிலிசியா - டிலோரன்ஸ், யோகானி, வலன்சியா, கௌசிகா, சுவஸ்திகா, ரிஷிக்கா, நிவேசிக்கா, கிஷான், பிரவீன், நயனிகா, ஆர்த்திக், ஆடாஸ், வைசியா, சயுந்தன், அபிஷேக் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் (09.09.2022) இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் விலங்கன் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
த.நந்தகுமாரன் (பெறாமகன்)
077 129 8159
021 224 0950

ஆயாக் கடவை பிள்ளையார் கோயில் முன் ஒழுங்கை
(பூதராயர் கோயிலடி)
புன்னாலைக்கட்டுவன்.
(12723, 12722)

# நெருக்கடி...

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சமூக பாதுகாப்பு உதவுத்தொகை அறவீட்டுத்தொகை சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

சமூக பாதுகாப்பு என்பது முக்கியமானது. தேவையானவர்களுக்கு அந்தப் பாதுகாப்பை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாங்கள் இருக்கின்றோம்.

மறைமுக் வரிகளை நீக்கி நேரடி வரிகளை அறவிடும் நோக்கிலேயே இதனை கொண்டு வருவதாக அரசாங்கத்தில் உள்ளவர்கள் கூறினாலும் இது மறைமுக வரியாகவே வரவுள்ளது.

அத்துடன் இது சமூக பாதுகாப்புக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் என்றும், அரசாங்கத்தின் செலவுகளுக்கு இந்த வரிகள் பயன்படுத்தப்படாது என்றும் அரசாங்கம் உறுதிமொழியை வழங்க வேண்டியது அவசியமாகும்.

ஆரம்பத்தில் 8 வீத வரி இருந்தது. இதனுடன் இணைத்தே 2.5 வீத வரியை இணைக்க தீர்மானிக்கப்பட்டது. அது தொடர்பில் அன்றே நாங்கள் விமர்சனங்களை முன்வைத்தோம். இந்த வரியை 2.5 வீதம் என்று கூறினாலும் 5 வீதமாவது அறவிடப்படும் என்றோம்.

இதனால் இதுவொரு குழப்பமான வரியே. இந்நிலையில் 8 வீதத்தில் இருந்த வற்வரி 12 வீதமாகி பின்னர் 15 வீதமாகியது. இதனை தொடர்ந்து மீண்டும் 5 வீதம் அல்லது 7 வீதத்தால் அதிகரிக்க திட்டமிடப்படுகின்றது.

இவ்வாறு இரண்டு வித வரிகளை அறிமுகப்படுத்தினால் அது நெருக்கடியானது. இது வற் வரியென்றால் மக்களுக்கு மறைக்காது உண்மைகளை கூறி கேளுங்கள்.

2019 டிசம்பரில் வரிகளில் திருத்தங்களை மேற்கொள்ளும் போது அது தொடர்பில் நிதி அமைச்சுக்கூட அறிந்திருக்கவில்லை. அதனாலேயே நெருக்கடிகள் அதிகரித்தன.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட யோசனைக்கமையவே சமூக பாதுகாப்பு வரிச்சட்டமூலம் கொண்டு வருகின்றது. ஏன் இதனை கொண்டு வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றார். (ம)


## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4881)




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777


# கோவிட் தொற்று 5 பேர் மரணம்

(கொழும்பு)

கொரோனா தொற்றால் நாட்டில் மேலும் ஐந்து பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில், 30 தொடக்கம் 59 வயதுக்குட்பட்டவர்களில் பெண் ஒருவரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 3 ஆண்கள், ஒரு பெண் உள்ளிட்ட 4 பேருமாக ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். (ம)


## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. உணவு பரிமாறுபவர் ஆண்/பெண்
2. சிற்றுண்டிகள் தயாரிப்பவர் ஆண்/பெண்
3. பழயூஸ் தயாரிப்பவர் ஆண்/ பெண்
4. துப்பரவு பணியாளர் ஆண்/பெண்

பகுதி நேரம்/ முழு நேரம் (12721)

076 166 1986

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-4881)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## இலவச விசா வாய்ப்பு

### அமெரிக்க லொத்தர் விசா



அமெரிக்கா செல்ல பாஸ்போட் எடுத்துவிட்டீர்களா? (C-4881)



!!!அலட்சியம் வேண்டாம்!!! October 05 பதிவு ஆரம்பம்

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம் குடும்பத்தினருக்கு இரண்டு வாய்ப்புக்கள்|PASSPORT அவசியம்.

எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் நூற்றுக்கணக்கானோர் வாழ்கின்றனர்

V2 TRAVELS 0768226244 0768226240

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 18 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை ரவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1 km தூரத்தில்
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12710)

தொடர்புகளுக்கு:- 076 755 8606, 077 911 6983

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 114 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1½ Km தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1½ Km தூரத்தில்
- புத்தூர் சந்தியில் இருந்து (பருத்தித்துறை வீதி) மட்டுவில் செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து இரண்டாவது காணி
- 775 இலக்க போக்குவரத்து பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்வதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12710)

077 [illegible] 5999, 076 436 5814, 077 874 8135


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.